Makkal Kural 3/9/16

4 மக்கள் குரல் 03-9-2016

## ஸ்ரீசாய்ராம் என்ஜினீயரிங் கல்லூரி விழா

# மகாத்மாகாந்தியின் 'சத்தியசோதனை'யை படித்தேன்; வணிகத்தில் மாற்றத்தை நிகழ்த்தினேன்; இன்று எனக்கு 55 கிளைகள்; 30 லட்சம் வாடிக்கையாளர்

## நேச்சுரல் ஸ்பா நிர்வாகி குமரவேல் அனுபவ பேச்சு

தாம்பரம், செப். 3–

தனிமனிதனால் மகத்தான மாற்றத்தை நிகழ்த்த முடியும் என்பதற்கு உலகளாவிய அளவில் நல்ல உதாரணம் மகாத்மா காந்தி. அவரது சத்திய சோதனை நூலை மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டும் என்று நேச்சுரல் ஸ்பா நிறுவன தலைமை செயல் அதிகாரி சி.கே.குமரவேல் கூறினார்.

ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற வணிக மேலாண் துறை தொடக்கநாள் விழாவில் அவர் மேலும் பேசியதாவது:–

மகாத்மா காந்தி குறித்து கல்லூரியில் விழாவில் எழுத்தாளர் எம்.எஸ்.உதயமூர்த்தி பேசும்போது தனிமனிதனால் மகத்தான மாற்றத்தை நிகழ்த்த முடியும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் மகாத்மா காந்தி என்று குறிப்பிட்டது என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

அதனால் ஏற்பட்ட மனஎழுச்சி காரணமாக அவரது சத்திய சோதனை புத்தகத்தைப்படிக்கத் தொடங்கினேன். நானும் அவரைப்போல வணிகத்தில் ஒரு மாற்றத்தை நிகழ்த்த வேண்டும் என்று மனதார விரும்பினேன்.

நிச்சயம் என் முயற்சியில் நான் வெற்றி பெறுவேன் என்று என்னுள் கனவை விதைத்தேன். அதை தினமும் திரும்பத் திரும்ப நம்பிக்கையுடன் எண்ணிப்பார்த்து,கனவை செயல் ஆக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டதன் விளைவாக இன்று 550 கிளைகளுடன் 30 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டு 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பளித்து வரும் தொழிலதிபராகத் திகழ்கின்றேன்.



ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி வணிக மேலாண்துறை தொடக்க நாளில் இறுதியாண்டு மாணவர்களின் வணிக ஆய்வுக் கருத்துக் கணிப்பில் தேர்வு செய்யப்பட்ட கல்யாண் ஜூவல்லர்ஸ் முதன்மை மேலாளர் விஜெய் ஆனந்துக்கு வழங்குகிறார். சாய்ராம் கல்வி அறக்கட்டளை நிர்வாகி ஜெ.ஷர்மிளா ராஜா. உடன் துறைத் தலைவர் கே.மாறன், சதீஷ்குமார், நேச்சுரல் ஸ்பா முதன்மை செயல் அதிகாரி சிஇகே.குமரவேல், முதல்வர் சி.வி.ஜெயக்குமார் உடன் உள்ளனர்.

வேலை தேடுவோர்களாக இல்லாமல் வேலை வழங்குவோராகத் திகழ்வேன் என்ற உறுதியுடன்,எண்ணாலும் சமூகத்தில் மகத்தான மாற்றத்தை நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் உயர்ந்த இடத்தைப்பெற கல்லூரியில் படித்த கல்வி மட்டும் போதாது.தொடர்ந்து உங்கள் தொழில் தொடர்பான கல்வியை மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். என்னை இன்னும் மேம்படுத்திக் கொள்வதற்காக தினமும் 3 மணி நேரம் ஒதுக்கி கற்று வருகிறேன் என்றார் அவர்.

விழாவில் இறுதியாண்டு மேலாண் துறை மாணவர்கள் ஆய்வு மூலம் தேர்வு செய்த கல்யாண் ஜூவல்லர்ஸ் நிறுவனத்துக்கு சிறந்த தொழில் நிறுவனத்திற்கான விருது வழங்கப்பட்டது.

வணிக மேலாண் படிப்பில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கிய சாய்ராம் கல்விக்குழும அறக்கட்டளை நிர்வாகி ஜெ.ஷர்மிளா ராஜா,சர்வதேச மாணவர் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயில கல்லூரி செலவில் அளிக்கப்பட்டுவரும் வாய்ப்பை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.